வகுப்பு:6 பருவம்:2 பாடம்:தமிழ் தலைப்பு:மூதுரை

சரியான விடையைத் தேர்வு செய்க:

1.மாணவர்கள் நூல்களை ..... கற்க வேண்டும்.

அ) மேலோட்டமாக ஆ) மாசுற இ) மாசற ஈ) மயக்கமுற

2.இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்

இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

3.மூதுரை நூலின் ஆசிரியர் ----------

அ) பாரதியார் ஆ) ஔவையார் இ) பாரதிதாசன் ஈ) நச்செள்ளையார்

4.மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மாச + அற ஆ) மாசு + அற இ) மாச + உற ஈ) மாசு + உற

5.குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம் இல்லாதவர்

இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம் அல்லாதவர்

6.சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) சிறப்பு உடையார் ஆ) சிறப்புடையார் இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

7.கீழ்க்காண்பவைகளுள் ஔவையார் எழுதாத நூல் எது?

அ) ஆத்திசூடி ஆ) மூதுரை இ) கண்ணன் பாட்டு ஈ) நல்வழி

8. மூதுரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை-------

அ) 31 ஆ) 30 இ) 42 ஈ) 41

9.மூதுரை என்பதற்கு -------- என்று பொருள்

அ) இளையோர் கூறும் அறிவுரை ஆ) சிறியோர் கூறும் அறிவுரை

இ) மூத்தோர் கூறும் அறிவுரை ஈ) வலியோர் கூறும் அறிவுரை

10. ---------- ச்சென்ற இடமெல்லாம் சிறப்பு.

அ) கல்லாதவருக்கு ஆ) கற்றவருக்கு

இ) மன்னனுக்கு ஈ) செல்வமுடையவருக்கு

LIVEWORKSHEETS